# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2366/16 – 2024 ජනවාරි මස 10 වැනි බදාදා – 2024.01.10

*2366/16 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தில் புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் இல. 107டி, பனாபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் பனாபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. KE/BLT/2022/89 ஆம் இலக்க மற்றும் 2022.05.31 ஆந் திகதிய சுவட்டு வரைபடத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள். :-

01. துண்டு ‘A’ - **பாராவத்த - விஸ்தீரணம் : 0.1012 ஹெக்டயார்.**

வடக்கு: பாராவத்த; கிழக்கு: பாராவத்த; தெற்கு: பாராவத்த; மேற்கு: வீதி மற்றும் பாராவத்த.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல : 4-3/18/2021/WS/03.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,
இல. 1200/6,
இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 15.

EOG 01- 0083

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தில் புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் இல. 108ஏ, ஹல்ஒமுவ கிராம அலுவலர் பிரிவில் எரபுதுவல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட KE/BLT/2022/88 ஆம் இலக்க மற்றும் 2022.05.31 ஆந் திகதிய சுவட்டு வரைபடத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் மற்றும் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளுக்கான எல்லைகள். :-

01. **துண்டு 'A' - தவட்டகஹயட்ட கும்புர மற்றும் கொஸ்கஹயட்ட கனட்டி - விஸ்தீரணம் : 0.0152 ஹெக்டயார்.**

வடக்கு: தவட்டகஹயட்ட கும்புர மற்றும் கொஸ்கஹயட்ட; கிழக்கு: வெட்டப்பட்ட வடிகான்; தெற்கு: வெட்டப்பட்ட வடிகான்; மேற்கு: தவட்டகஹயட்ட கும்புர மற்றும் கொஸ்கஹயட்ட.

02. **துண்டு 'B' - மெதகந்த - விஸ்தீரணம் : 0.0042 ஹெக்டயார்.**

வடக்கு: வெட்டப்பட்ட வடிகான்; கிழக்கு: வீதி (பிரதேச சபை); தெற்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் மெதகந்த; மேற்கு: மெதகந்த மற்றும் வெட்டப்பட்ட வடிகான்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல : 4-3/18/2021/WS/145.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6,
இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 15.

EOG 01-0084

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.